# கொரிய குடியரசின் அதிபரின் அரசுமுறை இந்திய விஜயம்

ஜனவரி 9, 2014

இந்திய குடியரசுத் தலைவர் மேதகு திரு பிரணாப் முகர்ஜி விடுத்த அழைப்பினை ஏற்று கொரிய குடியரசின் அதிபர் மேதகு பார்க் கியுன் ஹை அரசு முறைப்பயணமாக இந்தியாவில் 2014 ஜனவரி 15ந் தேதி முதல் 18ந்தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

அதிபர் பார்க் கியுன் ஹை இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்குடன் உயர்மட்ட அளவிலான பேச்சு வார்த்தையில் ஈடுபடுவார். இருதரப்பு, பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்து விவாதிப்பார்.

இந்த விஜயம் இரு நாடுகளுக்கு இடையேயான தளத்தகை உறவுகளை மேலும் விரிவு படுத்தும்.

**புது தில்லி**
**ஜனவரி 09, 2014**